விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 060 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 05 சனிக்கிழமை (17.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## தமிழரசுக் கட்சியை சிதைக்க சிலர் முயற்சி

இரா.சம்பந்தன் காட்டம்

3 ஆம் பக்கம் பார்க்க

## தலைமன்னார் - இராமேஸ்வரம் தொடர்பை விஸ்தரிக்க ஆராய்வு

மன்னாரில் இந்திய உயர்ஸ்தானிகர்

7 ஆம் பக்கம் பார்க்க

## 10 வயதுச் சிறுமி மன்னாரில் படுகொலை

- வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம்?
- சந்தேகத்தில் ஒருவர் கைது
- பொதுமக்கள் போராட்டம்.



15

## மனித உரிமைகள், சமூக நீதி தரத்தில்

# இலங்கை தொடர்ந்து பின்னோக்கிச் செல்கிறது

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை

(கொழும்பு)

மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி தொடர்பான தரத்தில் இலங்கை தொடர்ந்து பின்னோக்கிச் செல்வதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

HUMAN RIGHTS WATCH

## தொடு திரை வழிகாட்டி

யாழ்.போதனாவில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சேவைகள் பெற வருபவர்கள் இலகுவாக தகவல்களை பெறும் "தொடு திரை வழி 02

பாராளுமன்றம்

## 3 நாட்கள் கூடுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றம் அடுத்த வாரம் 3 நாட்கள் கூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக அறி 15

## இளம் குடும்பஸ்தரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

வவுனியா வீரபுரத்தில் சம்பவம்

(வவுனியா, )

வவுனியா, வீரபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 15

## காங்கேசன்துறை துறைமுகத்துக்கு இந்திய உயர்ஸ்தானிகர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டார்.

இதன்போது காங்கேசன்துறை துறைமுகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை 15



எம்.பிக்களின் ஒப்புதலின்றி நிதி ஒதுக்கீடு

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கடும் அமளி துமளி

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலின்றி வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது தொடர்பாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடும் அமளி நிலை ஏற்பட்டது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நேற்று 15

## பொருளாதார வீழ்ச்சிக்கு மத்திய வங்கியே காரணம்

நீதி அமைச்சர் விஜயதாஸ




(கொழும்பு)

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைவதற்கு மத்திய வங்கியே பிரதான காரணம் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.01.1922 — மறைவு 23.10.1999

ஸ்ரீமான்

## சின்னையா நல்லையா

( 6ஆம் வட்டாரம், மண்டைதீவு )

ஐயா! என்றும் உங்கள் நினைவுடன்.
உங்கள் ஆத்மா கூத்தபிரானின்
பொன்னார் திருவடிகளில் வீற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 21/3 A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்

(அ)

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், கச்சேரி, அரியாலை, திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில் மற்றும் இதனை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

(19144)

**076 437 5404**

## காணவில்லை

சுதுமலை மானிப்பாய் வீதி தாவடி பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் german shepherd கறுப்பு நிற பெரிய இன நாய் காணமால் போய்விட்டது. தகவல் கிடைத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழுங்கப்படும்.

**074 124 8025**
**076 602 7624**

(19149)

## தொடு திரை...

காட்டி" நேற்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

சிகிச்சை இடங்கள், சேவைகள் வழுங்கப்படும் பகுதிகள், ஏனைய பொது வசதிகள் உள்ளடங்கலாக பல தகவல்களை தெரிந்து கொள்ள முடியும்.

ஆசிரியர் குணசீலன் அவர்கள் நேற்று இந்த சேவையை திறந்து வைத்தார். எதிர் காலத் தில் பொதுமக்கள் தங்களுடைய கணணி மற்றும் smart phone ஊடாக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

(ம-7.33)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 வீதி இரண்டாம் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- தரகர் தேவை இல்லை.
- 1 பரப்பின் விலை 20.0000/=
- பார்வையிடும் நேரம்

காலை 8.00 முதல் மாலை 6.00 மணி வரை

(19143)

**071 173 3911**
**076 853 5022**



# வடமராட்சி மண்ணில் முதல்முறையாக

(Zee தமிழ் சரிகமப வெற்றியாளர்)

"இசைக்குயில்"

## செல்வி உதயசீலன் கில்மிஷா

## மாபெரும் கௌரவிப்பு விழா






காலம் :
18.02.2024 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்
மாலை 3.00 மணி

இடம்
வட அல்வை இளங்கோ சனசமூக நிலைய மைதானம்
வேலுப்பிள்ளை கனகம்மா அரங்கு
(யா/அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலை அருகாமை)

விழா ஏற்பாட்டுக்குழு -
வட அல்வை இளங்கோ சனசமூக நிலையம்
(அல்வாய் வடக்கு - அல்வாய்)

(19147)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான ஐ.எம்.எப் இன் திட்டம் தடம்புரண்டால் ஆபத்து

## மத்திய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தினை முன்னெடுக்க முடியாத நிலையேற்பட்டால் பெரும் பொருளாதார ஆபத்து ஏற்படலாம் என மத்திய வங்கி எச்சரித்துள்ளது.**

உலகப் பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஏற்றுமதிக்கு ஏற் பட்டுள்ள ஆபத்துகளிற்கு மத்தி யில் இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருகின்றது.

இந்த நிலையில், சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கை மீதான திட்டம் தடம்புரண்டால் பெரும் பொருளாதார ஆபத்து ஏற்படலாம் என தெரிவித்துள் ளது.

சர்வதேச நாணயநிதியத் தின் திட்டத்திற்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் முதலீட்டா ளர்களின் எதிர்மறை உணர்வு கள் காரணமாக பெரும் பொரு ளாதார இழப்புகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என இலங்கை மத்திய வங்கி தெரி வித்துள்ளது. (நி-5-6)

# அஸ்வெசும இரண்டாம் கட்டம் மார்ச் 15 வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

அஸ்வெசும இரண்டாம் கட் டத்திற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை கள் நேற்று முதல் மார்ச் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதி பெறும் அனைவருக் கும் எவ்வித தடங்கலும் இன்றி அஸ்வெசும பலன்கள் கிடைக்கு மெனவும் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

அஸ்வெசும முதற்கட்டத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக் காத குடும்பங்களுக்கும் விண் ணப்பங்களை சமர்ப்பித்தும் வீட்டுத் தகவல் கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படாத எந்தவொரு நபர்களும் இரண்டாம் கட்டத்தி ற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித் தார்.

அஸ்வெசும இரண்டாம் கட் டம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கரு த்து வெளியிட்ட போதே நலன் புரி நன்மைகள் சபையின் தலை வர் ஜயந்த விஜேரத்ன இந்த விடயங்களை தெரிவித்தார்.

அஸ்வெசும இரண்டாம் கட் டத்திற்கான விண்ணப்பத்தை ஒன்லைன் முறையிலும் கிராம உத்தியோகத்தர் அல்லது பிர தேச செயலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்ப துடன், www.wbb.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய முடியு மெனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (நி-5-6)

# சிறீதரன் எம்.பியை சந்தித்த ஜீவன் தொண்டமான்



(யாழ்ப்பாணம்)


இலங்கை தமிழரசுக் கட்சி யின் தலைவராக தெரிவாகியி ருக்கும் சிவஞானம் சிறீதரனை மரியாதை நிமித்தம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் சந்தித்து கலந்து ரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீதரனின் இல்லத்தில் இக் கலந்துரையாடல் நேற்று காலை இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தமி ழரசுக்கட்சியின் தலைவராக தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனுக்கு ஜீவன் தொண்ட மான் வாழ்த்துகளை தெரிவித் துக் கொண்டார்.

நீர் வழங்கல் தொடர்பில் யாழ் ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத் தில் மேற்கொள்ளப்பட உள்ள விட யங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (நி-5-6-33)

# தமிழரசுக் கட்சியை சிதைக்க சிலர் முயற்சி



## இரா.சம்பந்தன் காட்டம்

(திருமலை)

நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தமிழ ரசுக் கட்சியை சிதைக்கச் சிலர் சதித் திட்டம் தீட்டுவ தாக தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் குற்றம் சுமத்தியுள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பதவி மோகத்தால் இலங் கைத் தமிழரசுக் கட்சியைச் சிதைக்கச் சிலர் சதித் திட்டம் தீட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட தரப்பின ருக்கு இது நன்றாகப் புரி யும்.

அவர்களின் சதித் திட்டம் வெற்றியளிக்க நாம் ஒரு போதும் இடமளிக்கமாட் டோம்.

அதேவேளை, நீதிமன் றங்களின் இடைக்காலத் தடை உத்தரவுகள் தொடர் பில் தான் இப்போது கருத் துத் தெரிவிக்க விரும்ப வில்லை எனவும் தெரிவித் தார்.

இலங்கை தமிழரசுக் கட்சி யின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்ப டையில் எட்டப்பட்ட முடிவு களை பொதுச் சபை அங்கீ கரிக்காதவிடத்து அல்லது அந்தத் தெரிவுகளில் குழப்ப ங்கள் நிலவுமிடத்து, தேர் தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்துங்கள் என்றும், அன்றைய தினமே மாநாட்டையும் நடத்தி முடி யுங்கள் என்றும் கடந்த செவ்வாய்க் கிழமை தன் னைச் சந்தித்த பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் சம்பந்தன் தெரி வித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி-5-6)

# மடு தேவாலயம் சென்று வழிபட்டார் இந்திய உயர்ஸ்தானிகர்

(மன்னார்)

புதிதாக பொறுப்பேற்ற இலங்கைக்கான இந் திய உயர்ஸ்தானிகர் சந் தோஷ் ஜா நேற்று முன் தினம் மன்னாரில் உள்ள மடு தேவாலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுப ட்டுள்ளார். (நி-5-6)



# செங்கடல் நெருக்கடியால் இலாபமூட்டும் இலங்கை

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் கொள் கலன் கப்பல்களின் எண்ணி க்கை 32 வீதத்தால் அதி கரித்திருப்பதாக துறைமுக ங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

செங்கடலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளே இந்த அதிகரிப்புக்கு காரண மாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் நாட்டின் வரு மானமும் அதிகரித்துள்ள தாக வும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# யாழ்ப்பாணம்-இந்தியா விமான சேவையை தினசரி ஆரம்பிக்க தீர்மானம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

பலாலி விமான நிலையத் தின் ஊடாக இந்தியாவுக்கான மற்றுமொரு தினசரி விமான சேவை ஆரம்பிக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இண்டிகோ விமான சேவை நிறுவனத்து டன் பேச்சுவார்த்தைகளை இல ங்கை அரசு ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அம்பாந் தோட்டையில் உள்ள மத்தள விமான நிலையம் தொடர்பில் முதலீட்டு விருப்பங்கள் கோரப் பட்டதோடு, அதற்கான ஒரு முதலீட்டாளரை விலைமனு சபை தெரிவு செய்துள்ளது.



குறித்த முதலீட்டாளருடனான பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளன.

இதற்கான உடன்பாடு அடு த்த வாரம் எட்டப்படலாம் எனவும் அதன் மூலம் மத்தள விமான நிலையத்தையும் இலாபமீட்டும் வகையில் மாற்ற முடியும் என வும் விமான நிலைய வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

அத்தோடு, இந்த ஒப்பந்தம் ரஷ்ய மற்றும் இந்திய தனியார் கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப் பிட்டுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடமாகாண துடுப்பாட்டப் போட்டி

**முதலாமிடம் மன்னார் மாவட்ட செயலகம்**



**இரண்டாமிடம் யாழ்.மாவட்ட செயலகம்**



வடக்கு மாகாணத்தின் மாவட்ட செயலகங்களுக் கிடையிலான பதவிநிலை உத்தியோகத்தர்களுக் கான சிநேகபூர்வ மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட செயலக அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண் டது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

2024 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான மென் பந்து துடுப்பாட்டப் போட்டியில் முதலாம் இடத்தினை மன்னார் மாவட்ட செயலகமும் இரண்டாம் இடத்தினை யாழ்.மாவட்ட செயலகமும் பெற்றுக் கொண்டுள்ளன.

இத் துடுப்பாட்டப் போட்டியில் பிரதம விருந்தி னர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், அப்போது கடமையில் இருந்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன், முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அருளம்பலம் உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ் குமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

2025 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண மாவ ட்ட செயலகங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டப்போட்டி மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-90)


## மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 12 - 1992



மறைவு
14 - 02 - 2024

## ஆனந்தராசா சயந்தன்
### (தொழிலதிபர்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தராசா சயந்தன்(தொழிலதிபர்) அவர்கள் கடந்த 14.02.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆனந்தராசா - சுகிர்தா தம்பதியரின் அன்பு மகனும் சுதாகரன் - பார்க்கவி தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் காத்திகேசு மற்றும் செல்வமலர், அமரர் நடராசா மற்றும் யோகம்மா ஆகியோரின் அன்பு பேரனும் பிரியங்கா அவர்களின் பாசமிகு கணவரும் அப்ஷராவின் பாசமிகு தந்தையும் பிரசாந்தியின் அன்பு சகோதரனும் சிந்துராஜ் அவர்களின் அன்பு மைத்துனரும் ஜெயிலன், ஹைசன், அக்ஷறா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதுரங்கா, சாரங்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(19146)

தகவல்:
குடும்பத்தினர்


# வவுனியாவில் நகை திருட்டு 32 வயது இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபயிற்சிக்கு வருகை தந்தவரின் நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் 32 வயது இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நடை பயிற்சிக்காக கடந்த சில நாட்களாக வவுனியா நகரசபை மைதானத்திற்கு வந்து சென்றுள்ளார்.

வழமை போன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலையும் நகரசபைக்கு வருகை தந்துள்ளார்.

இதன்போது தான் அணிந்திருந்த சங்கிலி, காப்பு உள்ளிட்ட 4 பவுண் தங்க ஆபரணங்களை நகரசபை வளாகத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட தனது மோட்டார் சைக்கிள் இருக்கைக்குள் வைத்து பூட்டி விட்டு நடைப் பயிற்சிக்கு சென்றுள்ளார்.

நடைப்பயிற்சி முடிந்த பின்னர் தனது மோட்டார் சைக்கிளை எடுப்பதற்காக குறித்த பெண் வருகை தந்த போது அவரது மோட்டார் சைக்கிள் இருக்கை உடைக்கப்பட்டு அதில் இருந்த நகைகள் திருடப்பட்டிருந்தன.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய் திருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்திரு ந்த பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, பம்பைமடுப் பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞனை கைது செய்ததுடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது திருடப்பட்ட ஆறு அரைலட்சம் ரூபாய் பெறுமதியான 4 பவுண் நகைகளும் உடைமையில் இருந்து மீட்கப்பட்டதுடன், திருட்டுச் சம் பவத்தின் போது சந்தேகநபர் தப்பிச் செல்ல பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

(ம-7,250)

# தரிசு நிலங்களை விவசாயத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

ஈர பிரதேசத்தில் தரிசு நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நெற்செய்கை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் ஈர வலயத்தில் பல வயல் நிலங்கள் பயன்படுத்தப்படாமல் விடப் பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவின்படி, அந்த நிலங்கள் ஏனைய பயிர்களுக்கும் கால் நடை வளர்ப்புக்கும் விடுவிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் முதல் அதற்கான நட வடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்படி, உள்ளூர் வட்டாரத்தில் உள்ள விவசாய அபிவிருத்தி நிலை யத்தில் விண்ணப்பம் அளித்து, விளைச் சலுக்கு தேவையான அனுமதியை பெற முடியும் என தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான குடிநீர் இன்மையால் பழம்பாசி கிராம மக்கள் அவதி

(அக்கராயன்)

முல்லைத்தீவு பழம் பாசி கிராமத்திற்கு சுத்தி கரிக்கப்பட்ட குடிநீர் வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். பழம்பாசி கிரா மத்தில் 390 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் பழம்பாசி கிராம அலுவலர் பிரிவில் உள்ள கரடிப்பிலவு, 17 ஆம் கட்டை ஆகிய கிரா மங்களுக்கு மூன்றாண்டு களுக்கு முன்னே குடிநீர் கிடைக்கின்ற போதிலும் பழம்பாசி கிராமத்திற்கு இதுவரை குடிநீர் கிடை க்காத நிலைமை காண ப்படுகின்றது.

பழம்பாசி பாடசாலை யிலும் குடிநீர் நெருக்கடி காணப்பட்ட நிலையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட சுத்திகரிக் கப்பட்ட குடிநீர் தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது. பழம்பாசி கிராமத்தில் 23 பேர் சிறுநீரக பாதிப் புகளை எதிர்கொண்டு ள்ளனர்.

இந்நிலையில் பழம் பாசி கிராமத்திற்கு சுத்திக ரிக்கப்பட்ட குடிநீர் கிடை ப்பதற்கு வழி செய்யுமாறு கிராம மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ள னர். (நி-5-6-350)

# குடியிருப்புக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு பழம் பாசி, மணவாளன் பட்ட முறிப்பு ஆகிய கிராமங் களிலும் யானைகளின் தொல்லை அதிகரித்துள் ளதால் அதனை கட்டுப்ப டுத்து மாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

மணவாளன்பட்ட முறிப்பு கிராமத்தில் 400, பழம்பாசிகிராமத்தில் 390 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன. தற்போது நிறைவடைந்துள்ள கால போக நெற்செய்கையின் போது கமநல சேவை நிலையங்களினால் அமைக்கப்பட்ட யானை வேலிகள் கழற்றப்பட்ட தன் காரணமாக வருகை தரும் யானைகளின் தொகை வீழ்ச்சி அடை ந்திருந்த நிலையில் தற் போது யானைகள் கூட்டம் கூட்டமாக குடியிருப்புக ளுக்குள் வருகை தந்து தென்னை, வாழை போன்ற பயன்தரு மரங் களை அழிப்பதுடன் குடியிருப்பாளர்களையும் அச்சத்தில் ஆழ்த்தி வரு கின்றது.

இந்நிலையில் இரு கிராமங்களுக்கும் பயிர்ச் செய்கை காலங்களில் மட்டுமல்ல நிரந்தரமா கவே கிராமங்களுக்குள் யானை வரமால் யானை வேலிகளை அமைத்துத் தருமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள் ளனர். யானைகளின் வருகைகளினால் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டு ள்ளதாக இரு கிராமங்க ளின் மக்களும் கவலை தெரிவித்தனர். (நி-5-6-350)

# நடமாடும் மருத்துவ முகாம்களை
## கிராமங்களிலும் நடத்துமாறு கோரிக்கை

(அக்கராயன்)


முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு பிரதேச செய லாளர் பிரிவில் உள்ள தேராவில், இளங்கோ புரம், வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், பாரதி புரம் ஆகிய கிராமங்க ளுக்கு நடமாடும் மரு த்துவ சேவையினை நடத்துமாறு இக்கிரா மங்களின் மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

இக்கிராமங்களில் இருந்து மூங்கிலாறு மருத்துவமனைக்கே மக்கள் சென்று வரும் நிலையில் கண் பரி சோதனை, இரத்த பரி சோதனை, சிறுநீரக பரி சோதனை என்பவற் றிற்கு புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை, முல்லைத்தீவு பொது மருத்துவமனை, தரும புரம் மருத்துவமனை, கிளிநொச்சி பொது மருத் துவமனை என்பவற்றி ற்கே நீண்ட தூரங்கள் மேற்படி கிராமங்களின் மக்கள் செல்ல வேண் டிய அவல நிலை காண ப்படுகின்றது.

இது தொடர்பில் சம்ப ந்தப்பட்ட அதிகாரிகள் கரிசனை கொண்டு குறித்த கிராமங்களில் உள்ள மக்களுக்கான நடமாடும் மருத்துவ சேவை ஒன்றினை நட த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து ள்ளனர். (நி-5-6-350)


முதலாம் ஆண்டு
நினைவஞ்சலி

பிள்ளையாய் மடியில் 08 . 08 . 1942



மங்கள விநாயகர் அடியில் 28 . 02 . 2023

அமரர் திரு. வேலுப்பிள்ளை செல்வரத்தினம் (இரத்தினம்)

(உப்பு வல்லை ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலய, சிறிதேவி சைவ உணவக, சிறிதேவி பழக்கடை உரிமையாளரும் ஆவார்.)

திதி-பூர்வபக்க நவமி 17.02.2024

மறைந்தும் மறையாது என்றென்றும் எம் மனங்களில் நிறைந்தவர் அப்பா!

கண்முன்னே வாழ்ந்த காலம் கண்ணிமைக்கும் நேரத்தில் கனவாகிப் போனதே அப்பா!

ஓராண்டுகள் கழிந்தாலும் உங்கள் நினைவே நிழலாய் அமைந்து விட்டதே அப்பா!

இறை தொண்டில் உங்களை அர்ப்பணித்தீர்கள் இதுவே போதும் என்று உப்புவல்லை ஸ்ரீ மங்கள விநாயகர் ஆட்கொண்டாரோ உங்களை! (சி-8365)

சிறிதேவி பழக்கடை மந்திகை,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்
குடும்பத்தினர்.


# இராசிபலன்

17.02.2024
மாசி 05, சனிக்கிழமை
அட்டமி பிற்பகல் 1.56 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 2.04 மணிவரை

சுபநேரம் -3.33-05.03 மணிவரை
இராகுகாலம்-9.33-11.03 மணிவரை
அட்டமி- நவமி

சந்திராஷ்டமம்
அத்தம்,சித்திரை.

வளவன்

**மேஷம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கடகம்** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** மறைமுக எதிர்ப்புகள் அகலும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**தனுசு** வியாபார விரோதம் விலகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்,புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலன் சீராகும்.

**மகரம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

துவங்கினால் முடிக்கவும் முடிக்கக் கூடியதையே துவங்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் கைதான 20 மீனவர்கள் விடுதலை

## மேலும் மூவருக்கு சிறை

(கரணவாய்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த நான் காம் திகதி கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களில் 20 பேர் நிபந்தனை அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் மூவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடற்படையால் கைது செய்யப்பட்ட 23 மீனவர்களுக்கும் நீரியல்வளத் திணைக்களத்தினால் மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு குற்ற பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் 20 மீனவர்களுக்கும் 18 மாதகால சாதாரண சிறை தண்டனை விதித்து அதை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தார்.

இரண்டு படகுகளின் உரிமையாளர்களுக்கும் தலா 6 மாத சிறை தண்டனையும் மற்றொருவர் 2019 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டவர் என்பதால் அவருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (நி-5-6-60)

# யாழ்.ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் குடிநீர் விநியோகம் தொடர்பில் ஆராய்வு

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் விநியோகம் தொடர்பில் ஆராயப்பட்டது.

நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகம் தொடர்பில் அமைச்சர் ஜீவன்தொண்டமான் தலைமையில் விரிவாக ஆராயப்பட்டது.



இது குறித்து கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், கமக்கார அமைப்புக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கொழும்பில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு உரிய முடிவினை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. (நி-5-6-33)

# எருமை மாடுகளுடன் மோதி விபத்து ஒருவர் காயம்-இரு எருமை மாடுகள் பலி

(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் ஏ 35 வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பரந்தன் முல்லைத்தீவு ஏ 35 வீதியின் புளியம் பொக்கணை பகுதியில் இருந்து கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களை ஏற்றி வந்த பேருந்து ஒன்று வீதியில் நின்ற எருமை மாடுகளுடன் மோதியுள்ளது.

இதன்போது 2 எருமை மாடுகள் உயிரிழந்துள்ளதுடன் 2 மாடுகள் காயமடைந்த நிலையிலும் காணப்படுகிறது. இதே வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் எருமை மாட்டுடன் மோதி அதில் பயணித்தவர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கட்டாக்காலிகளாக விடப்படும் கால்நடைகள் தொடர்ந்தும் வீதிகளில் இரவு வேளைகளில் நடமாடுவதனால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

# கரை திரும்பும்போது சேதமடைந்த படகு

(கரணவாய்)

வியாபாரிமூலை மீன்பிடித்துறையில் இருந்து கடற்றொழிலுக்கு சென்று திரும்பிய படகு ஒன்று நேற்றுமுன்தினம் அதிகாலை கடல் அலையில் சிக்குண்டு விபத்துக்குள்ளாகி சேதமடைந்துள்ளது.

கரை திரும்பும்போது வான் பகுதியில் படகு நுழைய முற்பட்டபோது மீன்பிடி படகில் பொருத்தப்பட்டிருந்த வெளியிணைப்பு இயந்திரம் திடீரென செயலிழந்த நிலையில் கடல் அலையில் சிக்குண்டு வான் பகுதியில் உள்ள கற்பாறைகளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. (நி-5-6-60)

# முற்றவெளியில் கார்ணிவேல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சி.ஜே.பிறமோட்டர்ஸ், ரேனுகா பந்தல் இணைந்து நடத்தும் கார்ணிவேல் நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2024 ஆம் ஆண்டிற்கான கலைக் குரிசில், இளம் கலைஞர் விருதுத் தெரிவு மற்றும் சிறந்த நூற் பரிசு, நடுவர் ஆகிய விடயத் தெரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டங்களில் இணைந்து பயன்பெற விரும்புபவர்கள் பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கு அலுவலக நேரத்தில் வருகை தந்து உரிய விபரங்களுடன் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் 2024.03.20 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பப் படிவங்களை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

# கண் பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவுசெய்யும் கண் பரிசோதனை முகாம் இன்று சனிக் கிழமை காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர் களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ்.போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண் டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய் யுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். [illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 300 | 390 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 | 900 | 600 |
| தக்காளி | 800 | 700 | 700 | 850 | 685 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 160 | 125 |
| கோவா | 650 | 480 | 500 | 500 | 600 |
| கரட் | 800 | 800 | 800 | 900 | 900 |
| பூசணி | 280 | 280 | 250 | 350 | 260 |
| புடோல் | 200 | 200 | 300 | 250 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 240 | 250 | 240 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 350 | 350 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 380 | 380 | 350 | 450 | 350-480 |
| பாகற்காய் | 500 | 400 | 500 | 400 | 475 |
| வெண்டக்காய் | 400 | 400 | 300 | 500 | 340 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 140 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 400 | 600 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 500 | 550 |
| பீற்றூட் | 200 | 300 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 500 | 1000 | 510 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 1200 | 1400 | 1400 |
| போஞ்சி | 350 | 550 | 450 | 700 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 250 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 80 | 50-90 |
| தேசிக்காய் | 150 | 300 | 250 | 200 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 115 | 100 | 70-110 | 50-110 |
| இராசவள்ளி | 350 | 400 | 350 | 400 | 400-500 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 300 | 300 | 150 |
| முள்ளங்கி | 100 | 100 | 300 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 | 140 |
| வெள்ளரி | 60 | 50 | 50 | 80 | 80 |
| [illegible] | 100 | 100 | 100 | 200 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார்-இராமேஸ்வர தொடர்பை விஸ்தரிக்க இந்தியா ஆராய்வு

## இந்திய உயர்ஸ்தானிகர் மன்னாரில் தெரிவிப்பு

(மன்னார்)

**தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை இந்தியா ஆராய்ந்து வருவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் எச்.இ.சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**



புதிதாக பொறுப்பேற்ற இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்விற்காக நேற்று முன்தினம் மன்னாருக்கு விஜயம் செய்த வேளை குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்த தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மீனவ சமூகத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு தொழில்நுட்பம் இந்தியாவில் இருந்து கொண்டு வருவது தொடர்பில் ஆராய்வதாக தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் சந்தோஷ் ஜா, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கரன் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-33-285)


**யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)**
**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதியநிர்வாகத் தெரிவும் கௌரவிப்பு நிகழ்வும் - 2024**

இடம்:
**வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

காலம்:
**18.02.2024 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9.00மணி**

தலைமை:
**திரு.செ.ஜெயக்குமார் அவர்கள்**
(தலைவர், யா.மா.பா.உ.கூ.சங்கம்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(க.செல்வச்சந்திரன்),
செயலாளர். (சி-8366)

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.



PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்
# மக்கள் வங்கி
# சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 5000/- ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2024 பங்குனி 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணி வரை எந்தவொரு வார நாளிலும் மு.ப.9.00-பி.ப 4.00 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களை பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2024 பங்குனி 13 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல:62, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax : 021 222 2602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல: 021 222 2601/ 021 222 8602 (சி-8364)



# கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி மீள் சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வி கோரல் -2024

எமது சபையினால் கழிவகற்றல் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவு, பொலித்தீன் கழிவு, கண்ணாடிக் கழிவு, தகரப் பொருட்கள், காட்போட் மட்டை, பழைய பத்திரிகை, சஞ்சிகைகள் மற்றும் உக்கக்கூடிய பசளையாக பயன்படுத்தக்கூடிய இயற்கை கழிவுப்பொருட்கள் ஆகியவற்றினை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு தரம் பிரிக்கப்பட்ட அக்கழிவுகளை ஆறுமாத காலத்திற்கு செல்லுபடியாகும் வண்ணம் ஒரு கிலோகிராம் இற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :-19.02.2024 தொடக்கம் 06.03.2024 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி | :-07.03.2024 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :-07.03.2024 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | :-கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம். |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா.1000.00 ஐ செலுத்தி இரண்டு படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா.5000.00 செலுத்தப்பட வேண்டும்.
5. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 07.03.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. கூடிய கேள்வித்தொகை சமர்ப்பித்ததன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் கொள்வனவுதாரர் உரிய கொடுப்பனவினை செலுத்தி மீள்சுழற்சிக் கழிவுகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
7. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
8. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/ செயலாளருக்கு உண்டு.
9. மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவோ அல்லது 021 228 5761 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.** (சி-8367)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# மீன்களின் உணவுகளை உண்ணும் அவலநிலையில் நைஜீரியா மக்கள்



(அபுஜா)

பொருளாதார நெருக்கடியின் எதிரொலியால் நைஜீரியாவில் அரிசியின் விலை உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் மக்கள் மீன்கள் உண்ணும் அரிசியினை பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அரிசி ஆலைகளில் முன்னர் ஒதுக்கப்பட்டு வந்த அஃபாஃபாடா எனும் தடிமனான, சமைக்க கடினமான அரிசி வகையை பயன்படுத்த அந்நாட்டு மக்கள் ஆரம்பித்துள்ளனர்.


சில வருடங்களுக்கு முன், அஃபாஃபாடா அரிசியை, மீன்களுக்கு உணவிட பயன்படுத்துபவர்களிடம் குறைந்த விலைக்கு அரிசி ஆலையின் உரிமையாளர்கள் விற்று வந்தனர், சில சமயங்களில் அந்த அரிசியினை விற்காமல் தூக்கி வீசியும் உள்ளனர். ஆனால், இந்த நிலை தற்போது மக்கள் அந்த அரிசியை உண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அந்நாட்டின் ஏழை, எளிய மக்கள் இந்த அரிசியினை தற்போது அதிகளவில் பயன்படுத்த தொடங்கியிருப்பதால், மீன் பண்ணை வைத்திருந்தவர்களுக்கு இப்போது அஃபாஃபாடா கிடைப்பதும் அரிதாகி வருகிறது.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி காரணமாக, எரிபொருளுக்கான மானியத்தை அந்நாட்டு ஜனாதிபதி போலா டினுபு ரத்து செய்தமையால், அந்நாட்டு நாணயம் மீதான பண மதிப்பு குறைவடைந்திருப்பதாலும் நைஜீரியாவில் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது.

இந்நிலையில், அந்நாட்டின் பல பகுதிகளிலும் விலை உயர்வுக்கு எதிராக மக்கள் போராட்டத்தை நடத்தி வரும் அதேவேளை, கடந்த 2 மாதங்களில் நைஜீரியாவில் விலைவாசி 2 மடங்காக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பொருளாதார வீழ்ச்சியால் 4 ஆவது இடத்திற்கு சென்ற ஜப்பான்



(டோக்கியோ)

உலக பொருளாதாரத்தில் மூன்றாவது இடத்தில் இருந்த ஜப்பான் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்த நிலை காரணமாக 3 ஆவது இடத்திலிருந்து சரிந்து 4 ஆவது இடத்திற்கு சென்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜேர்மனி 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

மேலும் அமெரிக்கா முதல் இடத்திலும் சீனா இரண்டாவது இடத்திலும் இந்தியா ஐந்தாவது இடத்திலும் தம்மை தக்க வைத்துக் கொண்டுள்ளன.

ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி முந்தைய காலாண்டில் 3.3% ஆக சரிவடைந்த நிலையில் கடந்த ஒக்டோபர்-டிசெம்பர் காலாண்டில் 0.4% சரிந்தது.

உள்நாட்டுத் தேவையின் முக்கிய தூணை ஊன நுகர்வு மற்றும் மூலதனச் செலவினங்களில் உள்ள மந்தம்தான் பொருளாதார சரிவிற்கான முக்கிய காரணங்கள் என ஜப்பானிய பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலைமை நீடித்தால் மேலும் அடுத்தடுத்த காலாண்டில் பொருளாதாரம் 1.4% சரிவைச் சந்திக்கும் எனவும் எச்சரித்துள்ளனர்.

ஏற்கனவே வரும் 2030 ஆம் ஆண்டில் ஜப்பான், ஜேர்மனி ஆகிய நாடுகளை பின்தள்ளி உலக பொருளாதாரத்தில் இந்தியா மூன்றாவது இடத்தையும் ஆசியாவில் இரண்டாவது இடத்தையும் விரைவில் பிடிக்கும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த நிலையில் ஜப்பானின் வீழ்ச்சியை உலக நாடுகள் உற்று நோக்கி வருகின்றன. (நி-5-6)


# அமெரிக்காவி...

## பைடன் வருவதை...

### விளாடிமிர் புடி...

(மொஸ்கோ)

அமெரிக்காவில் இரண்டாவது ...
டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாவ...
பைடன் வருவதையே ரஷ்யா விரும்...
ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரி...



# புற்றுநோய் தடுப்பூசி தயாரிப்பின் இறுதிக் கட்டத்தில் ரஷ்யா

## விளாடிமிர் புடின்

(மொஸ்கோ)

"புற்றுநோய் தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளை நாங்கள் உருவாக்குவதில் கடைசி கட்ட ஆய்வுகளை செய்து வருகிறோம்" என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதற்கு உலகின் பல நாடுகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் புற்றுநோய்க்கு தடுப்பூசியை உருவாக்கும் முயற்சியில் ரஷ்யாவும் ஈடுபட்டு வருகிறது.

மொஸ்கோ மன்றத்தில் மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள புரட்சி குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பேசுகையில் அவர் அதனை தெரிவித்தார்.

மேலும் இது குறித்து தெரிவித்த அவர், புதிய தலைமுறையின் புற்றுநோய் தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

இதன் கடைசி கட்ட ஆய்வுகளை செய்து வருகிறோம். விரைவில் இவை மக்களுக்கு கிடைக்கும். அவை தனிப்பட்ட சிகிச்சை முறைகளாக திறம்பட பயன்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (நி-5-6)

அ... நே... அ...

உத... த்து... ரோ... பாட்... பரித... ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...வின் ஜனாதிபதியாக ...தையே ரஷ்யா விரும்பும்

## ...புடின்

...வது தடவையாக ...பாவதை விட ஜோ ...ிரும்பும் என ரஷ்ய ...தெரிவித்துள்ளார்.



ரஷ்ய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த புடின், "பைடன் நீண்ட அனுபவம் உடையவர் மட்டுமல்ல, அவர் நடவடிக்கைகளை எளிதில் யூகிக்க கூடியவை. அவர் கடந்த காலத்து அரசியல் சிந்தனைகள் மற்றும் நடவடிக்கைகளை கொண்டவர்.


ஆனால், டொனால்ட் ட்ரம்ப் அவ்வாறு அல்ல. ட்ரம்பை பிறரால் புரிந்து கொள்ளவோ அல்லது அவரது நடவடிக்கைகளை யூகிக்கவோ முடியாது.

இருப்பினும், அமெரிக்காவில் யார் ஜனாதிபதியாக பதவி ஏற்றாலும் அவர்களுடன் ரஷ்யா இணைந்து பணியாற்றும். நேட்டோவில் அமெரிக்காவின் ஈடுபாடு குறித்து ட்ரம்ப் கொண்டிருக்கும் சிந்தனைகளில் நியாயம் உள்ளது.

ஆனால், முடிவு செய்ய வேண்டியது அமெரிக்காவின் பொறுப்பு எனத் தெரிவித்தார். (நி-5-6)

# மறைந்து போகும் நிலையில் மெக்சிக்கோ வளைகுடா

## விஞ்ஞானிகள் தெரிவிப்பு



(மெக்சிக்கோ)

உலகில் காணப்படும் பனிப்பாறைகள் விரைவாக உருகுவதால், மெக்சிக்கோ வளைகுடா நீரோடை மறைந்து போகக்கூடும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

அதிகரித்து வரும் வாயு வெளியேற்றம் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு, பூமியில் பனிப்பாறைகள் அதிகளவு உருகுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை கட்டுப்படுத்தாவிட்டால், 2025 ஆம் ஆண்டுக்குள், வளைகுடா நீரோடை மீது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு அட்லாண்டிக் பிராந்தியத்தின்காலநிலையை கட்டுப்படுத்துவதில் வளைகுடா நீரோடை இயற்கையாகவே தனித்துவமான பாத்திரத்தை வகிக்கின்றது.

இந்த நீரோடை கடல் வெப்ப நிலையின் சமநிலையை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதுடன் அதன் மூலம் வெப்பத்தையும் கடத்துகிறது.

வளைகுடா நீரோடை இல்லாது போனால் வட அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளில் வெப்பநிலை சில தசாப்தங்களுக்குள் 10 டிகிரி செல்சியஸ் அளவிற்கு குறையக்கூடும் என்பதுடன் இதனால் பாதகமான காலநிலை மாற்றம் ஏற்படலாம் என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் கடும் புயல் மற்றும் கடல் நீர் மட்டம் உயர்வடையக் கூடும் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

# அறுவை சிகிச்சையின் போது நோயாளியின் உயிரைப் பறித்த ரோபோ

## அமெரிக்காவில் துயரம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ரோபோ உதவியுடன் நடத்தப்பட்ட மருத்துவ அறுவை சிகிச்சையில், ரோபோவின் தவறான செயற்பாட்டால் நோயாளி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த ஹார்வி சுல்ட்ஸெர் என்பவர் தனது மனைவியின் பெருங்குடல் புற்று நோய்க்கு சிகிச்சை கோரி பாப்டிஸ்ட் ஹெல்த் போகா ரேடன் மண்டல மருத்துவமனையில் மனைவி சாண்ட்ரா சுல்ட்ஸெரை சேர்த்தார்.

அங்கே அறுவை சிகிச்சை மூலம் கேன்சர் பாதிப்பை அகற்றுவதற்கான மருத்துவம் பரிந்துரை செய்யப்பட்டது.


பல்வேறு கரங்கள் கொண்ட 'டா வின்சி' என்ற மருத்துவ ரோபா மூலம் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டது.

அதன்படி சாண்ட்ராவின் பெருங்குடலில் பீடித்திருந்த கேன்சர், 'டா வின்சி' ரோபோ மூலமாக அகற்றப்பட்டது.

ஆனால் அந்த அறுவை சிகிச்சையின்போது எதிர்பாரா விதமாக, சிறுகுடலில் விழுந்த துவாரம் காரணமாக, சாண்ட்ரா மிகவும் பாதிப்புக்கு ஆளானார்.

புற்றுநோய் பாதிப்பு காரணமாக வாழ் நாளை எண்ணி வந்த சாண்ட்ரா, 'டா வின்சி' ரோபோவின் தவறான அறுவை சிகிச்சையால் உயிரிழந்ததை துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

# பிரான்ஸ்-உக்ரைன் இடையே பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்து



(பாரிஸ்)

பிரான்ஸிற்கும் உக்ரைனுக்கும் இடையில் இரு தரப்பு பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி ஆகியோர் கையொப்பமிடவுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

ரஷ்ய-உக்ரைன் போர் நடைபெற்றுவரும் நிலையில் அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவரும் நிலையில் பிரான்ஸினால் மேற் கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் அரசியல் அரங்கில் பேசுபொருளாக அமைந்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமி கொலைச் சம்பவம்;

# குற்றவாளியை தூக்கிலிடுமாறு கோரி தலைமன்னாரில் மக்கள் போராட்டம்

(மன்னார்)

**10 வயது சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி உயிரிழந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



தலைமன்னார் பகுதியில் 10 வயது சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்ற நிலையில் குறித்த சிறுமியின் வீட்டின் அருகில் நேற்று முன்தினம் மாலை சிறுமியின் உடல் சடலமாக மீட்கப்பட்டிருந்ததுடன் சந்தேக நபரொருவரை பொலிஸார் கைது செய்தனர். இந்த நிலையில் நேற்று தலை மன்னார் பொலிஸார் மன்னார் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் உட்பட்ட குழுவினர் சிறுமியின் மரணம் தொடர்பில் மேலதிக விசாரணை களை முன்னெடுத்திருந்தனர்

விசாரணைகளின் பின்னர் சிறுமியின் உடலை மேலதிக பரிசோதனைக்காக பொலிஸார் கொண்டு செல்ல முற்பட்ட வேளை, தலை மன்னார் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதுடன் குற்றவாளியை உடனடியாக தூக்கில் போடு மாறும் கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் கொலையாளிக்கு உரிய தண்டனையை விரைவில் வழங்குமாறு கோரி விசாரணைக்காக வருகை தந்த பதில் நீதிவானிடம் மகஜர் ஒன்றை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## முத்துஐயன் குளத்து நீர்

### பயிர் செய்கைக்காக திறந்து வைப்பு



(நெளுக்குளம்)

முத்துஐயன்கட்டு குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக்கான நீர் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

4522 ஏக்கரில் இம்முறை விவசாயச் செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது.இதில் நெல் பயிர்ச்செய்கைக்காக 3684 ஏக்கரும் உப உணவு பயிர்ச்செய்கைக்காக 828 ஏக்கரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சிறுபோக செய்கையினை விவசாயிகள் மேற்கொள்ளவுள்ளதற்கான குளத்திற்கான நீர் திறந்துவிடும் நிகழ்வு கமக்கார அமைப்புக்களால் குளக்கட்டு பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் பொங்கி பூசை வழிபாடுகளை தொடர்ந்து குளத்து கொட்டிலில் நடைபெற்ற வழிபாடுகளுடன் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முத்துஐயன் கட்டு நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி.மஞ்சுளா யொய்ஸ்குமாரும் திட்ட பிரிவு உதவியாளர் வி.ராஜகாந்தனும் கலந்து கொண்டுள்ளதுடன் விவசாயிகள் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்ட அதேவேளை திறக்கப்பட்ட நீரானது எதிர்வரும் 2024.08.31 ஆம் திகதி அன்று பூட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**உயர் பட்டப்படிப்புகள் பீடம்**

**புதிய அனுமதிகள்**

1. சைவசித்தாந்தத்தில் முதுமாணி (Master of Saiva Siddhanta) 2024/25 (அணி VIII)

2. பண்பாட்டியலில் முதுமாணி (Master of Cultural Studies) 2023/24 (அணி V)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி - 29.03.2024

மேலதிக தொடர்புகளுக்கு - 021 222 3608

**குறிப்பு : பண்பாட்டியலில் முதுமாணி (அணி V) கற்கைநெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

**பதிவாளர்.**

(சி-8368)


## இன்று ஒரு தகவல் 39



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கோபம்

அடிக்கடி கோபப்படாதே கோபப்படாதே என்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே அது எப்படி முடியும்? அப்படி என்று சொல்லி கோபப்படுகிறவர்கள் சில பேர் உண்டு.

இது நியாயமான கோபம். ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிந்து கொண்டால் கோபம் வராதுன்னு சொல்றது உண்டு.

ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்வதற்கு முதல்லே இந்த கோபத்தை பற்றியே கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கு.

கோபம் வருவது இயற்கை. அதைப் பயன்படுத்துகிற விதத்தைப் பொறுத்துத் தான் அது நல்லது செய்யிறதும் கெடுதல் செய்யிறதும்.சரி அது இருக்கட்டும்.

இன்றைக்கு அறிவியல் ரீதியாக அந்த கோபத்தைப் பற்றி கொஞ்சம் அலசுவோம்.

அதாவது அறிவியல் பார்வையிலே கோபத்தைப் பற்றி ஒரு ஆராய்ச்சி. இயல் பூக்கம் என்று சொல்கிறோமே அதிலே கோபமும் ஒன்று.

ஒரு சிறந்த நோக்கத்தோட கோபத்தை இயற்கை எங்களிடம் கொடுத்திருக்கு. அதை முதலிலே நாம் புரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தைப் பொறுத்த வரைக்கும் கோபம் என்பது ஒரு சக்தி.

ஒரு தற்காப்பு சக்தியா உபயோகப்படுவதற்காக உயிரினம் எல்லாவற்றிற்கும் இயற்கை இந்த கோபத்தைக் கொடுத்திருக்கு. முள்ளம் பன்றி-சிலிர்க்குது, பாம்பு -படம் எடுக்குது, தேள் -கொடுக்கைத் தூக்குது, புலி -உறுமுது, சிங்கம்-கர்ஜிக்குது, கழுதை -பின்னங்காலை உதறுது. இது எல்லாம் கோபம் தான். எதற்காக இந்த கோபம்? தற்காப்புக்காக. எறும்பிலே இருந்து மனிதன் வரைக்கும் எல்லா உயிரினமும் அது அது பாணியிலே கோபத்தைக் காட்டிக் கொண்டு தான் இருக்கு.

கழுதை உதைக்காது,மாடு முட்டாது,தேள் கொட்டாது, புலி பாயாது அப்படின்னா அதுலாம் இந்த உலகத்திலே இல்லாமல் அழிந்து போய்விடும். இயற்கையோட பாதுகாப்பு விதிப்படி அது அது தன்னோட முறைப்படி கோபத்தை காட்டித் தான் தீரணும். இந்த தேள் இருக்கே அது ரொம்ப சாது. ஒருத்தரையும் கொட்டவே கொட்டாதுன்னா. அது ரப்பர் தேளுன்னு அர்த்தம்.

மற்ற உயிரினத்திற்கும் மனிதனுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இவனுக்கு ஆறாவது அறிவு ஒன்று இருக்கு. அது தான் பகுத்தறிவு.

அதனாலே இவன் தற்காப்புக்காக மட்டும் இல்லாமல் வேறு ஒரு காரணத்திற்காகவும் கோப உணர்ச்சியை பக்குவமாக பயன்படுத்த கடமைப்பட்டிருக்கான். அதைத்தான் றயிற்றஸ் இன்டிக்நேசன் என்று சொல்லலாம்.நியாயத்துக்காக கோபப்படுங்க. நீதியை நிலைநாட்டுவதற்காக கோப உணர்ச்சியைப் பயன்படுத்துங்க. மகான்களுடைய கோபம், காந்தியடிகள் சத்தியாக்கிரகம், கடவுள் நெற்றிக் கண்ணை காட்டினார்ன்னு சொல்கிறோமே அதுலாம் இந்த வகையைச் சேர்ந்த கோபம். கோபம் ஒரு சக்தி ஊற்றுன்னு விஞ்ஞானம் சொல்லுது அதுக்கு அடையாளம் என்ன தெரியுமா?நெஞ்சு படபடக்குது, உதடு துடிதுடிக்குது, பல்லு நறநறன்னு கடிச்சிக்குது, கண்ணு சிவக்குது, ரத்தம் வேகமா ஓடுது, மூச்சுத் திணறுது. மொத்தத்திலே உடம்பு பூராகவும் அந்த சக்தியோட வெளிப்பாட்டை தாங்க முடியாமல் நடுநடுங்குது. சராசரி மனுஷனுக்கு கோபம் வெளிப்படும் விதம் இப்படி. மகான்கள் கோப சக்தியை இப்படி வெளிப்படுத்துவதில்லை.

அது நெற்றிக்கண்ணா வரும், சக்தியாக்கிரகமாக வரும். தண்ணீரை அணை கடி வெளிப்படுத்திறது மாதிரி நிர்மாண சக்தியாக அது வெளியே வருது. நாமெல்லாம் என்ன செய்கிறோம்? கோபத்தை வெறுப்புணர்ச்சியாக மாற்றி விடுகின்றோம். பின்பு அவஸ்தைப் படுகிறோம்.

அதனாலே தான் கோபத்தை பாவம் என்று பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள். கோபமும் வெறுப்பும் சேர்ந்தா பாவம். கோபமும் அன்பும் சேர்ந்தா புண்ணியம். அநீதி பேரில் கோபம் வருதா.. அதோ அன்பு என்னும் உஷ்ணத்தை சேருங்க. அதுதான் சத்தியாக்கிரகம். அந்த அற்புதத்தை பண்ணிக் காட்டியவர் காந்தி. அதனால் கோபத்தை வெறுக்காதீர்கள் அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

கோபமும் அன்பும் சேர்ந்தா புண்ணியம் என்று சொன்னேன் அல்லவா. அதனால் தான் பல தம்பதிகள் புண்ணியம் செய்த தம்பதிகளாக இருக்கிறார்கள்.அது இரண்டிலே ஒன்று கோபம் இன்னொன்று அன்பு. கோபம் வேண்டாம் என்று தான் நினைக்கிறோம். அதற்காக நேரடியாகவே வந்து ஒருத்தர் உங்க பாக்கெட்டிலே உள்ள பணத்தை எடுத்துக் கொண்டு போனால் அவரை மறுபடியும் கூப்பிட்டு இந்தாங்க இன்னொரு பாக்கெட்டிலே பத்து ரூபா இருக்கு அதையும் சேர்த்து எடுத்துக் கொண்டு போங்க என்று சொல்லுவீங்களா?

ஒருத்தர் எதுக்கெடுத்தாலும் அர்த்தமில்லாமல் கோபப்படுவார். அவருக்கு மற்றவர்கள் சிடுமூஞ்சி என்றே பேரு வைத்துவிட்டார்கள். ஒரு நாள் அவரைத் தேடிக் கொண்டு ஒருத்தர் வந்தார். இந்த ஊரிலே ஒரு சிடுமூச்சி இருக்காமே. யார் வந்து எதைக் கேட்டாலும் எனக்குத் தெரியாது எனக்குத் தெரியாதுன்னு கத்துமாமே.. அதை உங்களுக்கு தெரியுமான்னு விசாரித்தார். இவர் கோபமாக தெரியாது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள் 13.02.2024–13.03.2024



சிம்ம இராசி வாசகர்களே!

மகம்: ஆத்ம காரகனான சூரியன், ஞான மோட்சக் காரகனான கேதுவின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு, இந்த மாதம் உங்கள் பாக்யாதிபதி செவ்வாய் பகவான் ஆறாம் இடத்தில் சஞ்சரிப்பதால் உடலில் இருந்த சங்கடம் நீங்கும். ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் போட்டியாளர்களால் உண்டான நெருக்கடிகள் விலகும். எதிர்ப்புகள் இல்லாமல் போகும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். செல்வாக்கு உயரும். மாதத்தின் பின்பகுதியில் புதன் பகவான் உங்களுக்கு சாதகமாக சஞ்சரிப்பதால் புத்திசாலித்தனத்துடன் செயற்படுவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். சிலருக்கு புதிய இடம் வாங்கும் யோகம் உண்டாகும். சப்தம ஸ்தானத்தில் சனிபகவானும், சூரியனும் சஞ்சரிப்பதால் உடல் நிலையில் கூடுதல் கவனம் தேவைப்படும். வாழ்க்கைத்துணை மற்றும் நண்பர்களை அனுசரித்துச் செல்வது நன்மையை ஏற்படுத்தும். வார்த்தைகளிலும் இக்காலத்தில் நிதானம் அவசியம். உங்களுக்கு எதிராக சிலர் சதிகள் புரியலாம் என்பதால் விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது. கலைஞர்கள் இக்காலத்தில் நிதானமுடன் செயற்படுவது நன்மையளிக்கும். புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. வெளிநாட்டிற்கு செல்வதற்காக மேற்கொண்ட முயற்சிகள் தற்சமயம் இழுபறியாகும். பெண்களுக்கு இந்த மாதம் சில சங்கடங்கள் ஏற்படும் என்றாலும் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். வாழ்க்கைத் துணையால் நன்மைகளை அடைவீர்கள். சிலர் புதிய வீட்டில் பால் காய்ச்சுவீர்கள். வேலை செய்யும் இடத்தில் கவனமுடன் செயற்படுவதால் நன்மை அதிகரிக்கும். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். மாணவர்கள் மாதத்தின் முற்பகுதியில் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.

சந்திராஷ்டமம்: பெப்.14, மார்ச் 12,13

அதிர்ஷ்ட நாள்: பெப்.16,19,25. மார்ச் 1.7.10.

பரிகாரம்: ஆதிநாதப் பெருமாளை எண்ணி செயற்பட யாவும் வெற்றியாகும்.

பூரம்: உங்கள் இராசிநாதன் சூரியன் ஏழாம் இடத்தில் சனி பகவானுடன் இணைந்து சஞ்சரிப்பதுடன் இராசியையும் பார்க்கிறார். இந்நிலையில் குருபகவானின் ஐந்தாம் பார்வையும் இராசிக்கு உண்டாகிறது என்பதால் உங்கள் செல்வாக்கு உயரும். மற்றவர்களால் மதித்திடக்கூடிய இடத்தை அடைவீர்கள். தொழில், உத்தியோகம், வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பொறுப்பு வந்து சேரும். உங்கள் நட்சத்திர நாதன் செவ்வாயுடன் இணைந்து சஞ்சரிப்பதால் மனதில் சஞ்சலம் அதிகரிக்கும். தேவையற்ற சிந்தனைகள் மேலோங்கும் என்றாலும், குருபகவானின் பார்வை முழுமையாக உங்களுக்கு இருப்பதால் சிநதித்து செயற்படுவீர்கள். எந்தவித சங்கடங்களும் உங்களுக்கு ஏற்படாது. எதிர்பார்த்த வருமானம் வரும். முயற்சிகள் வெற்றியாகும். குடும்பம், தன ஸ்தானத்தில் கேது பகவான் சஞ்சரிப்பதால் பணவரவில் தடைகள் இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும். குடும்பத்திற்குள் குழப்பம் இருந்து கொண்டே இருக்கும். உங்கள் வார்த்தைகளின் வழியாகவும் சங்கடங்கள் ஏற்படும். அதேநேரத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கும், உங்கள் இராசிக்கும் குருபகவானின் பார்வை இருப்பதால் குலதெய்வ அருளுடன் அனைத்தையும் சமாளிப்பீர்கள். நெருக்கடிகளில் இருந்து வெளியில் வருவீர்கள். குழந்தைக்காக நீண்ட காலமாக ஏங்கியவர்களுக்கு இப்போது அந்த பாக்கியம் ஏற்படும். அஷ்டம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் பெண்கள் கவனமுடன் செயற்பட வேண்டும். மனதில் உண்டாகும் குழப்பங்களுக்கு இடம் தராமல் வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. விவசாயிகளுக்கு முதலீட்டிற்கு




ஏற்ற லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை அதிகரிக்கும்.

சந்திராஷ்டமம்: பெப்.14,15, மார்ச் 13

அதிர்ஷ்ட நாள்: பெப்.19,24, மார்ச்1,6,10

பரிகாரம் ஆண்டாளை வழிபட்டால் நன்மை பன்மடங்காக வரும்.

உத்திரம் 1 ஆம் பாதம்: ஆத்ம காரகனான சூரியனின் நட்சத்திரத்திலும், இராசியிலும் பிறந்த உங்களுக்கு இந்த மாதத்தில் முயற்சிகளில் சில சங்கடங்கள் உண்டாகும். ஏழாம் இடத்தில் சஞ்சரிக்கும் சூரிய பகவானால் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடம் மாற்றம், அதன் காரணமாக ஊர்விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படும். சுயதொழில் செய்பவர்கள் வியாபாரத்தை விரிவு செய்வதற்காக வெளியூரில் கிளைகளை அமைப்பீர்கள். அதனால் வெளியூரில் வசிக்கும் நிலை ஏற்படும். குருபகவானின் பார்வை உங்களுக்கு சாதகமாக இருப்பதால் இடமாற்றமும் நன்மை தரும். ஆறாம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், சுக்கிரனின் பார்வை உங்கள் இராசிக்கு விரய ஸ்தானத்தில் பதிவதால் சிலர் புதிய இடம் வாங்குவர்.

சிலருக்கு வீண் செலவு ஏற்படும் என்பதால் திட்ட மிட்டு செலவழித்தால் விரயம் குறையும். எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் சிலர் தாங்கள் செய்யாத தவறுக்கு பதில் சொல்ல நேரிடலாம் என்பதால் பணிபுரியும் இடத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. வியாபாரத்தில் எதிர்பார்த்த வரவுகள் என்பது இல்லாமல் போகும் என்றாலும் ஆறாம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயால் எல்லா விதமான சங்கடங்களையும் எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். நோய்களில் இருந்து விடுபடுவீர்கள்.

எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த பூமி, நிலம் சம்பந்தப்பட்ட வழக்குகள் உங்களுக்கு சாதகமாக மாறும். காவல்துறையில் பணியாற்று வோருக்கு இந்த மாதம் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். சிலருக்கு விரும்பிய இட மாற்றம், பதவி உயர்வும் ஏற்படும். பெண்கள் அவசரத்தனத்தை விட்டு நிதானமாக செயற்படுவதால் நினைத்ததை சாதிக்க முடியும். வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச்செல்வது இக்காலத்தில் நன்மை தரும். மற்றவர்களின் ஆலோசனையை ஏற்காமல் சுயமாக சிந்தித்து செயற்பட பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த விளைச்சல் ஏற்படும். வருவாய் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் விலகும்.

சந்திராஷ்டமம்: மார்ச் 15,16

அதிர்ஷ்ட நாள்: பெப்.19, மார்ச் 1, 10.

பரிகாரம் அதிகாலையில் சூரியனை வழிபட வாழ்வு வளமாகும்.



கன்னி இராசி வாசகர்களே!

உத்திரம் 2,3,4 ஆம் பாதம்: ஆன்ம காரகனான சூரியன், வித்யா காரகனான புதனின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு, எல்லாவிதமான பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் சக்தி எப்போதும் இருக்கும். உங்கள் புத்தி சாலித்தனமே உங்கள் வாழ்க்கையின் அடிப்படை என்று சொல்லலாம். இந்த மாதம் முழுவதும் உங்கள் இராசிக்கு ஆறாம் இடத்தில் உங்கள் நட்சத்திர நாதன் சஞ்சரிப்பதால் இதுவரையில் உங்களுக்கிருந்த பிரச்சினைகள் விலக ஆரம்பிக்கும். வம்பு வழக்குகள் முடிவிற்கு வரும். புதிய தொழில் தொடங்க முயற்சித்தவர்களுக்கு அதற்குரிய அனுமதி கிடைக்கும். பொருளாதார நிலை உயரும்.

உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் நீங்கும். எதிரிகள் விலகிச் செல்வார்கள். அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். ஜென்ம இராசிக்குள் கேது பகவான் சஞ்சரிப்பதால் மனதில் குழப்பங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் சமாளிக்கும் நிலை உண்டாகும். வியாபாரம், தொழில் போன்றவற்றில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமாக ஏற்பட்ட வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். ஏழாமிட ராகுவால் எதிர்பாலினரிடமும் நட்புகளிடமும் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வார்த்தைகளில் கவனம் இருக்க வேண்டும். இல்லையெனில் விரோதத்தை சந்திக்க நேரிடும். பெண்களுக்கு இக்காலத்தில் உடல் ரீதியான பிரச்சினைகள் தீரும். குடும்பத்தில் நிம்மதியான நிலை உண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். விவசாயிகளின் விளைபொருளுக்கு எதிர்பார்த்த விலை கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவர். கலைஞர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

சந்திராஷ்டமம்: மார்ச். 14,15.

அதிர்ஷ்ட நாள்: பெப்.19,23. மார்ச் 1,5,10

பரிகாரம்: பாலகிருஷ்ணரை வழிபட நிம்மதி நிலைக்கும்.

அத்தம்: மனக்காரகன் சந்திரனை நட்சத்திரநாதனாகவும், கல்விக்காரகன் புதனை இராசிநாதனாகவும் கொண்டு பிறந்த உங்களுக்கு எந்தவொரு செயலையும் திறமையாக செய்திடக்கூடிய ஆற்றல் இருக்கும். எதற்காகவும் உங்களுடைய முயற்சிகளை நீங்கள் இடையில் நிறுத்தி விடமாட்டீர்கள். இந்த மாதத்தில் உங்கள் தன குடும்பாதிபதி சுக்கிர பகவான் உங்களுக்கு முழுமையான யோகத்தை வழங்கிட இருக்கிறார். நீங்கள் எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும். உங்கள் இராசியாதிபதியும் மாதத்தின் முற்பகுதியில் உங்களுக்கு சாதகமாக சஞ்சரிப்பதால், புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிலை உயரும். மேலதிகாரிகளின் ஆதரவு அதிகரிக்கும். சிலருக்கு விரும்பிய இட மாற்றமும், பதவி உயர்வும் ஏற்படும். புதிய சொத்து சேர்க்கையும் உண்டாகும். பெண்களுக்கு இந்த மாதம் யோகமான மாதமாக இருக்கும். குடும்பத்தினரின் ஆதரவு அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்களுக்கு உதவியாக இருப்பார். சுயதொழில் தொடங்க முயற்சித்தவர்களின் எண்ணம் நிறைவேறும். சிலருக்கு வேலை வாய்ப்பிற்குரிய தகவல் வந்து சேரும். கலைஞர்களுக்கு இந்த மாதம் யோகமாக இருக்கும். விவசாயிகள் தாங்கள் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.




சந்திராஷ்டமம்: மார்ச் 15,16

அதிர்ஷ்ட நாள்: பெப். 20,23, மார்ச் 2,5,11

பரிகாரம்: மீனாட்சியம்மனை வழிபட்டால் நன்மை பன்மடங்காகும்.

சித்திரை 1,2 ஆம் பாதம்: தைரிய, வீரிய, பராக்ரமக் காரகனான செவ்வாய், வித்யா காரகனான புதனின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு எந்த ஒன்றையும் வேகமாக செய்து முடிக்கும் ஆற்றல் இருக்கும். யாருக்காகவும் [illegible] மாற்றிக் கொள்ள [illegible]. உங்களுக்குரிய பாதை எப்பொழுதும் தனித்ததாகவே இருக்கும். இந்த மாதம் உங்களுக்கு இதற்கு முன்பிருந்த சங்கடம் எல்லாம் விலகும் மாதமாக இருக்கும். சத்ரு ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி, சூரியன் இருவரும் உங்கள் ஆற்றலை அதிகரிப்பர். முயற்சிகளை வெற்றியாக்குவர். நினைத்ததை சாதிக்கும் நிலையை உண்டாக்குவர். சிலருக்கு புதிய சொத்து சேர்க்கை உண்டாகும். அரசு வழியில் உண்டான சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும். அரசியல்வாதிகள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த பொறுப்பு வந்து சேரும். உடலில் இருந்த சங்கடங்கள் விலகி ஆரோக்கியமாக செயற்படுவீர்கள். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும்.

தொழில் தொடங்க எதிர்பார்த்த அனுமதிகள் கிடைக்கும். வெளிநாட்டு முயற்சிகள் வெற்றியாகும். குருபகவானின் பார்வை வாக்கு ஸ்தானத்திற்கு உண்டாவதால் உங்கள் வார்த்தைக்கு மதிப்புண்டாகும். கணவன், மனைவிக்குள் இருந்த சங்கடங்கள் விலகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும்.

பெண்களுக்கு இந்த மாதம் யோகமான மாதமாக இருக்கும். உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் நீங்கும். குடும்பத்தில் செல்வாக்கு உய ரும். மற்றவர்களால் மதிக்கப்படுவீர்கள். பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். விவசாயிகளின் விருப்பம் நிறைவேறும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் விலகும்.

சந்திராஷ்டமம்: மார்ச் 16,17

அதிர்ஷ்ட நாள்: பெப்.18, 23. மார்ச் 5, 9

பரிகாரம்: சாமுண்டீஸ்வரியை மனதில் வேண்டி வழிபட நன்மை உண்டாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின்


பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

408





முப்பத்தேழாம் அத்தியாயம்
காவேரி அம்மன்

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் ஆர்வத்துடன் எழுந்து போய் இளவரசரின் கட்டிலுக்குப் பக்கத்தில் கீழே உட்கார்ந்தார்கள். இளவரசர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

"நான் சிறு பையனாயிருந்த போது ஒரு சமயம் காவேரி நதியில் என் பெற்றோர்களுடன் படகில் போய்க் கொண்டிருந்தேன். என் தமையனும் என் தமக்கையும் கூட அச்சமயம் படகில் இருந்தார்கள். அவர்கள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். நான் மட்டும் காவேரி நதியின் நீர் சுழித்து ஓடுவதையும் அந்த சுழிகளில் சில சமயம் கடம்ப மலர்கள் அகப்பட்டுக் கொண்டு சுழல்வதையும் கவனித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சின்னஞ் சிறிய பூக்கள் அப்படிச் சுழலில் அகப்பட்டுத் தவிப்பதைப் பார்த்து எனக்கு வேதனை உண்டாகும்.

சில சமயம் படகின் ஓரமாகக் குனிந்து தவிக்கும் கடம்ப மலர்களை நீர்ச்சுழல்களிலிருந்து எடுத்து விடுவேன். அப்படி எடுத்து விட்ட ஒரு சமயத்தில் தவறித் தண்ணீரில் விழுந்துவிட்டேன். தலை குப்புற விழுந்தபடியால் திணறித் திண்டாடிப் போனேன்.

"காவேரியின் அடி மணலில் என் தலை இடித்த உணர்ச்சி இப்போதும் என் நினைவில் இருக்கிறது. பிறகு வேகமாக ஓடிய தண்ணீர் என்னை அடித்துத் தள்ளிக்கொண்டு போனதும் நினைவிருக்கிறது. எங்கேயோ வெகுதூரத்தில் பலருடைய கூக்குரல்களின் சத்தம் கேட்பது போலிருந்தது.

மூச்சுத்திணறத் தொடங்கியது. சரி, காவேரி நதி நம்மைக் கடலில் கொண்டு போய்த் தள்ளிவிடப் போகிறது என்று நினைத்துக் கொண்டேன். பெற்றோர்களும் தமக்கையும் தமையனும் நம்மைக் காணாமல் எவ்வளவு துன்பப்படுவார்கள் என்ற நினைவு உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் யாரோ என்னை இரு கைகளாலும் வாரி அணைத்து எடுத்தது போலிருந்தது. அடுத்த கணத்தில் தண்ணீருக்கு மேலே வந்துவிட்டேன். தலை, கண், மூக்கு, வாய் எல்லாவற்றிலிருந்தும் தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஆயினும் என்னை வாரி எடுத்துக் காப்பாற்றிய கைகள் என் கண்ணுக்குத் தெரிந்தன. பிறகு அந்தக் கரங்களுக் குரியவரின் முகத்தையும் பார்த்தேன்.

சில கணநேரந்தான் என்றாலும் அந்த முகம் என் மனத்தில் பதிந்து விட்டது. இதற்கு முன் எப்போதோ பார்த்த முகமாகவும் தோன்றியது. ஆனால் இன்னார் என்பதாகத் தெரியவில்லை.

"பின்னர் அந்தக் கைகள் வேறு யாரிடமோ என்னைக் கொடுத்தன. மறுகணம் நான் படகில் இருந்தேன். தாய், தந்தை, தமக்கை, தமையன் எல்லோரும் என்னைச் சுற்றிக் கொண்டார்கள். அவர்களுடைய துயரமும் பரிவும் அன்பும் ஆதரவும் என் கவனத்தை முழுவதும் கவர்ந்து விட்டன. சிறிது நேரத்திற்குப் பிறகு என்னைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றியது யார் என்பதைப் பற்றிக் கேள்வி எழுந்தது. ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள் என்னையும் கேட்டார்கள். நானும் சுற்றுமுற்றும் பார்த்தேன். அந்தத் தெய்வீகமான முகத்தை எங்கும் காணவில்லை. ஆகையால் கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாமல் விழித்தேன். கடைசியில் எல்லோருமாகச் சேர்ந்து காவேரி அம்மன்தான் என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். நான் நதியில் விழுந்து பிழைத்த தினத்தில் ஆண்டுதோறும் காவேரி அம்மனுக்குப் பூஜை போடவும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் என் மனத்தில் மட்டும் திருப்தி ஏற்படவில்லை.

என்னைக் காப்பாற்றியது காவேரி அம்மனாயிருந்தாலும் சரி, வேறு மானிட ஸ்திரீயாயிருந்தாலும் சரி என் மனத்தில் பதிந்திருந்த அவளுடைய திருமுகத்தை இன்னொரு தடவை தரிசிக்க வேண்டும் என்ற தாபம் என் மனத்தில் குடிகொண்டு விட்டது.


(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

# பேயால் வந்த வாழ்வு

(நேற்றைய தொடர்ச்சி)



சிலம்பம், மல்யுத்தம் என நடந்த அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று அரசரின் சிறப்பு விருந்தினராக விரும்பிய மதின் பேயை மனதில் நினைத்துக் கொண்டான். பேயின் உதவியால் எல்லா போட்டிகளிலும் வென்றான்.

அவனுக்கு ஓர் அறை கொடுக்கப்பட்டது. அரண்மனை உணவும் வழங்கப்பட்டது. ஒரு வாரம் தங்கி விருந்துண்டு தன் அறைக்குச் சென்றான் மதின்.

அங்கிருந்த அழகிய மஞ்சத்தில் படுத்தவுடன் உறக்கம் வந்து விட்டது. நடு இரவில் விழித்த மதின், தன் அறையில் சிறிது நேரம் உலாவினான். அப்போது சுவற்றில் காட்டெருமையின் கொம்பு பதிக்கப்பட்டுள்ளதைக் கண்டான். அதைப் பிடித்துப் பார்த்த போது "கிர்ர்" என்ற சத்தம் கேட்டது.

அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய் விட்டது. அதைப் பிடித்துத் திருகிய போது, தரையில் ஒரு சுரங்க வழி ஏற்பட்டது. ஒரு தீபத்தைக் கையில் எடுத்துக் கொண்டு படிக்கட்டுகளில் இறங்கினான்.

கீழே பெரிய அறை ஒன்று இருந்தது. எங்கு பார்த்தாலும் போர் ஆயுதங்களும் முத்து மாலைகளும் தங்க மாலைகளும் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தன.

தூரத்தில் யார் நின்று கொண்டிருப்பது? அமைச்சர் ராஜசேகர் இங்கு என்ன செய்கிறார்? உற்றுப் பார்த்தான். நகைகள், பணத்தை திருடி பையில் போட்டுக் கொண்டிருந்தார்.

அங்கிருந்த வாளை உருவி, அவனை வெட்டச் சென்றான் மதின்.

அதற்குள் ரகசிய வழியில் தப்பி விட்டான் அமைச்சர். பிறகு மதின்தன் இருப்பிடத்திற்குச் சென்று காட்டெருமைக் கொம்பைத் திருகி தரையை முன்பு போல மூடச் செய்தான்.

இதை எப்படியாவது அரசரிடம் சொல்ல வேண்டும் என்று மனதில் உறுதி செய்து கொண்டான்.

இரவோடு இரவாக அமைச்சரை பற்றி மன்னனிடம் கூறினான்.

பல நாட்களாக பொக்கிஷ அறையில் திருடு போவதை அறிந்திருந்த அரசர், எத்தனையோ காவல் போட்டும் கண்டு பிடிக்க முடியாத ரகசியத்தை மதின் சொன்னதும் மகிழ்ந்தார். உடனே அமைச்சரை கைது செய்ய ஆட்களை அனுப்பினார் மன்னர்.

குடும்பத்துடன் தப்ப இருந்த அமைச்சரை கைது செய்து சிறையில் அடைத்தான் அரசன். அரசனது முன்னோர் கள் வைத்திருந்த இந்த ரகசிய வழி அரசனுக்கே தெரியவில்லை. இதை எப்படியோ அறிந்த அமைச்சர், இத்தனை நாட்களாக ரகசிய வழியில் நுழைந்து நகை திருடிய விடயம் இப் போது தான் புரிந்தது. மதினை பாராட்டிய மன்னன் அவனையே தன் அமைச்சனாக்கிக் கொண்டான். பேயால் தனக்கு கிடைத்த வாழ்வை எண்ணி மகிழ்ந்தான் மதின்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வுலகைச் சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆலய வழிபாட்டை ஊக்குவியுங்கள்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தர் இங்கு உரையாற்றும்போது, ஆன்மீகதானம் செய்ய வேண்டும் எனக் கூறினார்.

சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து சுமார் 110 வருடங்கள் கடந்து விட்டன.

எனினும் 110 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் கூறிய ஆன்மீகதானம் குறித்து இப்போது நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆம், பொதுவில் இப்போது ஆலய வழிபாடு என்பது அருகி வருகிறது.

இந்நிலைமை எல்லாச் சமயங்களிலும் உள்ளதாயினும் அதன் தாக்கம் இந்து சமயத்தில் கணிசமாக இருப்பதை அவதானிக்க முடியும்.

அதாவது ஏனைய சமயங்கள் சில வரையறைகள், கட்டுப்பாடுகள் என்பவற்றினூடு ஆலய வழிபாட்டை கட்டாயப்படுத்தி வருகின்றன.

எனவே விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் தத்தம் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையுள்ளது.

ஆனால் இந்து சமயத்தைப் பொறுத்த வரை ஆலய வழிபாடு என்பது அறவே இல்லை என்று கூறுமளவுக்கு நிலைமை வந்தாகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுக்கு சிலர் சென்று வருகின்றனராயினும் எத்தனையோ ஆலயங்கள் வழிபடுநர் எவரும் இன்றி வெறிச்சோடிக்கிடக்கிறது.

உண்மை. சுற்றுமதில்கள், இராஜகோபுரங்கள், உட்பிரகார மண்டபங்கள், வர்ணப் பூச்சுகள் என ஆலயங்கள் அற்புதமாக நிமிர்ந்து நிற்பது மன ஆறுதலைத் தருகின்றதாயினும் வழிபடுவதற்கு ஆளில்லாதபோது அந்த ஆலயங்கள் எதற்கு என்ற கேள்வி எழவே செய்யும்.

இவ்வாறு ஆலய வழிபாடு இறங்குமுகமாக இருப்பதற்கான பிரதான காரணம் என்ன? என்று ஆராயும்போது, பூசை வழிபாடுகளைச் செய்கின்ற சிவாச்சாரியர்கள் நடந்து கொள்கின்ற முறைகள் ஆலய வழிபாடு மீதான நம்பிக்கையைத் தகர்த்து விடுகிறது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது பக்தி பூர்வமாக பூசைகளை ஆற்றுகின்ற சிவாச்சாரியப் பெருமக்களுக்கு மனக்குறை ஏற்படவே செய்யும்

ஆனால் நாம் இங்கு பிரஸ்தாபிப்பது இறை நம்பிக்கையோடு, மக்களிடம் ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்தும் உயர்ந்த நோக்குடன் செயற்படுகின்ற சிவாச்சாரியர்களை அல்ல.

மாறாக மூலாலயத்துக்குள் நின்று கையடக்கத் தொலைபேசியில் கதைப்பது, சிரிப்பது, அபிஷேகத்தை முறையாகச் செய்யாமல் ஏனோதானோ என்று செய்வது, பணத்தை மட்டுமே இலக்காகக் கொள்வது, கிரியை முறைகளை ஒழுங்காகக் கற்றுத்தேறாமல் அரைகுறையாக மந்திர உச்சாடனம் செய்வது. கிரியா விளக்கங்களைப் புரிந்து கொள்ளாமல், வேண்டாவெறுப்போடு நடந்து கொள்வது போன்ற சம்பவங்கள்; இனி ஆலய வழிபாடு வேண்டாம் என்ற மனநிலைக்கு மக்களை ஆக்கி விடுகிறது.

எனவே மனித வாழ்வியலுக்கு அதி அத்தியாவசியமான ஆலய வழிபாட்டை ஊக்குவிக்க சிவாச்சாரியக் குருமார் முன்வர வேண்டும்.

இதைச் செய்யாவிடின், நம் மத்தியில் பிறழ்வான நடத்தைகள் மலியத் தலைப்படுவதைத் தடுக்க முடியாது.

# சுகாதார ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் இணக்கம்

## தாதியர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அரச சேவை தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கும், சீருடைக்கான கொடுப்பனவை அதிகரிப்பதற்கும், மேலதிக நேரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக அரச சேவை தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை தங்களுக்கும் வழங்குமாறு வலியுறுத்தி, 72 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து கடந்த 13ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

சுகாதார தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை பேச்சுவார்த்தை நடத்தப்படும் என சுகாதார அமைச்சர் எழுத்துபூர்வமாக உறுதியளித்ததையடுத்து, நேற்று முன்தினம் காலை 6.30 மணியுடன் போராட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையிலேயே சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கும், சீருடை கொடுப்பனவை அதிகரிப்பதற்கும், மேலதிக நேரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக அரச சேவை தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அந்தக் கொடுப்பனவுகளை எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பாக எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள கலந் துரையாடலில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# யாழில் நடைபெறும் இசை நிகழ்வுகளில் இனி குழப்பங்கள் இருக்காது - அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசை நிகழ்வில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு தமது நெறிப்படுத்தல்கள் இல்லாமையும் ஒரு காரணம் என கடற்றொழில்அமைச்சர்டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இசை நிகழ்வில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எங்களுடைய இளைஞர்களைப் பலரும் குறை கூறுகின்றனர். நிகழ்வில் இளைஞர்கள் சிலர் தாக்குதலுக்கு இலக்காகியதாகவும் அறிந்து கொண்டேன்.

நிகழ்வு தொடர்பில் யாழ்.மாநகர சபை மற்றும் யாழ்ப்பாண பொலிஸார் கூடிய கவனம் செலுத்தி இருக்க வேண்டும். அது மட்டுமல்லாது நானும் அதனை பார்த்து இருக்க வேண்டும்.

நானும் அது தொடர்பில் கரிசனை இல்லாமல் இருந்து விட்டேன். இனி வரும் காலங்களில் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெறுமாக இருந்தால் மக்கள் பிரச்சினைகள் இன்றி சந்தோசமாக நிகழ்வுகளைக் கண்டுகளிக்க கூடியவாறான ஏற்பாடுகளைச் செய்வோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ம-7)

# இஸ்ரேல் - இலங்கை நேரடி விமான சேவை

(கொழும்பு)

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி விமான சேவை ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதனை துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதில் ஏற்படும் தாமதங்களைத் தடுப்பது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனை தெரிவித்தார். (ம-7)

# கில்மிஷாவுக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இளங்கோ சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தமிழகத்தின் சீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப வெற்றியாளர் கில்மிஷாவை கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை குறித்த சனசமூக நிலைய மைதானத்தின் வேலுப்பிள்ளை கனகம்மா அரங்கில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. அனாதரட்சகன் தலைமையில்நடைபெறவுள்ளது. (நி-5-6)

# 30 மாணவர்களுக்கு குளவிக்கொட்டு

(கொழும்பு)

மாவனெல்ல பிரதேசத்தில் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட 30 மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அதன்படி குளவிக்கொட்டுக்கு இலக்கான 30 மாணவர்களும் மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்களின் நிலைமையை மருத்துவர்கள் கண்காணித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை **காலை 08:30 மணியிலிருந்து மாலை 5:00 மணி வரை யாழ். பிரதேசத்தில்** இணுவில், இணுவில் கந்தசாமி கோவில், கந்தரோடை, மாகியப்பிட்டி சந்தை, மஞ்சத்தடி இணுவில், மருதனார்மடம் சந்தை, மதவடி, நாதன் கடை - இணுவில், பெருமாள்கடவை, பாலாவோடை- இணுவில், வைரவர் கோவில் சண்டிலிப்பாய் கோண்டாவில் புகையிரத நிலைய வீதி, தாவடி, உப்புமடம் ஆலங்குளாய் சண்டிலிப்பாய், சீரணி சந்தி, சங்குவேலி 53ஆம் பிரிவு, இராணுவ முகாம்-கொடிகாமம், அல்லாரை, அல்லாரை 4 வழி சந்தி, அம்மன் கோவிலடி - கச்சாய் தெற்கு, கொடிகாமம் பேருந்து நிலையம், டச்சு வீதி மீசாலை, எருவன் கொடிகாமம், ஐயனார் கோவிலடி - கொடிகாமம், கச்சாய் பாலாவி சந்திக்கு அருகில், கரம்பை குறிச்சி, கரம்பன், கறுக்காய் வரணி, கெற்பெலி, கொடிகாமம் கச்சாய் வீதி தேவாலயத்திற்கு அருகில், கொடிகாமம் பொலிஸ் நிலையம், குடமியன், மந்துவில், மிருசுவில் வடக்கு, நாவற்காடு, பழைய புகையிரத நிலைய பிரதேசம் மீசாலை, புத்தூர் சந்தி மீசாலை, சுட்டிபுரம், தாவளை இயற்றாலை, வாகையடி சந்தி - மீசாலை, வல்லைத்தோட்டம், வரணி கலைவாணி, வரணி சந்தை பிரதேசம், வரணி மாசேரி, வெள்ளாம் பொக்கட்டி, அல்லாரை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** இலங்கை வங்கி கிளிநொச்சி, பிருந்தா உற்பத்தியாளர், கார்கில்ஸ் பூட்சிற்றி, கச்சேரி, மக்கள் வங்கி கிளிநொச்சி, சதொசா கிளிநொச்சி, சிவகுரு அரிசி ஆலை, சிவநருட்செல்வன் அரிசி ஆலை, விளையாட்டு வளாகம், சன் தளபாடங்கள், நீர் வழங்கல் சபை கிளிநொச்சி, A.R.R விற்பனை அங்காடி, கிங்ஸ் விடுதி, 58 பிரிவு, இராணுவமுகாம் கிளிநொச்சி, புதிய கச்சேரியின் முன்வளாகத்தடி. கச்சேரி கிளிநொச்சி, கந்தசாமி கோவில் கரடிப்போக்கு, கிளிநொச்சி நகரம், மஞ்சுளா வெதுப்பகம் சந்தி, சம்பத் வங்கியடி கிளிநொச்சி, விதை உற்பத்தி பண்ணையடி, பிரதேச சபை சந்தி, திருநகர், வானவில் அம்பகாமம், அம்பகாமம் மொபிட்டல் கோபுரம், டயலொக் கோபுரம் ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம்வேலி வயல் வீதி, பெரிய புளியங்குளம் (தட்சை அடம்பன்), புலிமெச்சினாதிகுளம், புதிய நகர்(தட்சை அடம்பன்), தட்சை அடம்பன் (கரிப்பட்ட முறிப்பு) ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

04



ரஷ்யாவிலும் துருக்கியிலும் வழங்கும் மொழிகள் சிந்திய மொழிகளாகும். அரேபியாவிலும் வடஆபிரிக்காவிலும் வழங்கும் மொழிகள் செமிட்டிக் மொழிகளாகும். தமிழ்மொழி, கிரேக்க மொழி, இலத்தீன்மொழி, எபிரேய மொழி, சீனமொழி, சமஸ்கிருத மொழி ஆகியவை உலக மொழிகளில் பழைமையானவை.

இவற்றில் தமிழ் மூவாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் காட்டுவதுடன் இன்று வரை வழக்கிலிருந்து மறையாமல் இருந்து வருகிறது. கல்தோன்றா மண்தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த மொழி என்ற பெருமைக்குரிய மொழி எம் தாய் மொழியாகும். தமிழ் மொழியானது 2500 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ளது என்ற சிறப்பினைப் பெறுகின்றது.

**தமிழ்மொழி பற்றி....**

தமிழ்மொழி தமிழர்களினதும் தமிழ் பேசும் பலரின் தாய் மொழி ஆகும். தமிழ், உலகில் உள்ள முதன்மையான மொழிகளில் ஒன்றும் மற்றும் செம்மொழியும் ஆகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதிக அளவிலும் ஐக்கிய அரபு அமீரகம், தென்னாபிரிக்கா, மொரிசியஸ், பிஜி, இரீயூனியன், திரினிடாடு போன்ற நாடுகளில் சிறிய அளவிலும் தமிழ் பேசப்படுகிறது.

புள்ளிவிபரப்படி உலகம் முழுவதிலும் 8 கோடிக்கு (80 மில்லியன்) மேற்பட்ட மக்களால் பேசப்படும் தமிழ், ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் இருபதாவது இடத்தில் உள்ளது. இணையத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் இந்திய மொழிகளில் தமிழ் முதன்மையாக உள்ளதாக 2017ஆம் ஆண்டு நடைபெற்ற கூகுள் கணக்கெடுப்பில் தெரியவந்தது.

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் இரண்டே. ஒன்று சிங்கப்பூர் அடுத்தது இலங்கை. தமிழ் நாட்டை எடுத்துக் கொள்ள முடியாது ஏனெனில் இந்தியாவில் தமிழ் ஆட்சி மொழி இல்லை. தேசிய மொழி மட்டுமே. அதே போல் தமிழ் நாடு தனி நாடும் இல்லை, இந்தியக் கடவுச் சீட்டில் தமிழ் இல்லை.

இந்தியா, மொரிசியஸ், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் நாணயத் தாள்களில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக மொரிசியஸ் நாணயத்தாளில் தமிழ் எண்களும் எழுதப்பட்டுள்ளது. அதேபோல் மொரிசியஸ், இலங்கை நாணயத்தாள்களில் அதன் பெறுமதியும் அந்த நாட்டின் பெயரும் தமிழில் எழுதப்பட்டுள்ளது. சிங்கப்பூர் நாணயத்தாள்களில் அந்த நாட்டின் பெயர் மட்டுமே தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்தியாவில் நாணயத்தாளின் பெறுமதி மட்டுமே தமிழில் உள்ளது. சிங்கப்பூர், இலங்கை சில்லறை நாணயத்திலும் தமிழில். எழுதப்பட்டுள்ளது.

உலகத்திலேயே ஒரே ஒரு நாட்டின் கடவுச்சீட்டில் மட்டுமே தமிழ் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது இலங்கையின் கடவுச்சீட்டில் மட்டுமே. ஆசியான் கூட்டமைப்பில் (தென்கிழக்கு ஆசியா) தமிழும் ஒரு மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கும்மேல்பழைமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள தமிழ் மொழி, தற்போது வழக்கில் இருக்கும் ஒரு சில செம்மொழிகளில் ஒன்றாகும்.

மேலும் கவனமாகப் பழைய அமைப்புக்களைக் காக்கும் மரபினைக் கொண்டுள்ளதால், பழங்கால இலக்கிய நடை கூட மக்களால் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளது. எடுத்துக் காட்டாக, பள்ளிக் குழந்தைகள் சிறு வயதில் கற்கும் அகரவரிசையான ஆத்திசூடி 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்டது. திருக்குறள் ஏறத்தாழ 2,000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது.

தமிழ்மக்கள், 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒப்பந்தக் கூலிகளாகவும் கீழ் நிலை அரச பணியாளர்களாகவும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து பிரித்தானியப் பேரரசின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டனர். அவ்வாறு, அவர்கள் சென்ற இடங்களில் தமிழ் பேசும் சமுதாயங்கள் உருவாகின.

இவர்களின் வழி வந்தவர்கள் இன்று சிங்கப்பூர், மலேசியா, மொரீசியசு போன்ற நாடுகளில் குறிப்பிடத்தக்க குடித்தொகை கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். தென்னாபிரிக்கா, கயானா, பிஜி, சுரினாம், திரினிடாடு, உடொபாகோ போன்ற நாடுகளிலும் பலர் பூர்வீகத் தமிழராக இருந்தும் அந்நாடுகளில் அவர்கள் தமிழ் மொழியைப் பேசுவதில்லை.

மிக அண்மைக் காலங்களில், பெரும்பாலும் இலங்கையின் இன முரண்பாடுகள் காரணமாக அகதிகளாக இங்கிருந்து இடம்பெயர்ந்தவர்களும் ஓரளவு பொருளாதாரக் காரணங்களுக்காக இடம் பெயர்ந்தவர்களுமாகப் பல தமிழர்கள் அவுஸ்திரேலியாவிலும் கனடாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

தற்போது இவர்களில் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தமிழ் மொழியை ஓர் உயிர்ப்புள்ள மொழியாக நடைமுறைப்படுத்தி வந்த போதிலும் இளைய தலைமுறையினர் பலர் தமிழ் மொழியைப் பயன்படுத்த இயலாதவர்களாகவும் ஆர்வமற்றவர்களாகவும் வளர்ந்து வருவதைக் கவனிக்க முடிகின்றது.

தமிழ் இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாகும். அத்துடன் இந்திய அரசியலமைப்பின், எட்டாவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 22 மொழிகளுள் ஒன்றாகவும் உள்ளது. இலங்கையில் மூன்று ஆட்சி மொழிகளுள் தமிழும் ஒன்று. இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்திலும் புதுச்சேரி ஒன்றியப் பகுதியிலும் தமிழ் அரச அலுவல் மொழியாக இருக்கிறது.

சிங்கப்பூரிலும் நான்கு ஆட்சி மொழிகளுள் தமிழும் ஒன்று. தென்னாபிரிக்காவிலும் தமிழுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் உள்ளது. மலேசியாவிலும் முதல் நான்கு ஆட்சி மொழிகளில் தமிழும் இடம்பெற்றுள்ளது.

சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் தொடக்க இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. மொரிசியசில் சில பள்ளிகளில் தமிழ்மொழி பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. மொரிசியசின் பிராந்திய மொழி களில் தமிழும் ஒன்று.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல தமிழர் அமைப்புகளினதும் அறிஞர்களினதும் நீண்டகால முயற்சிகளைத் தொடர்ந்து இந்திய அரசினால் தமிழ் ஒரு செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அங்கீகாரம் பெற்றுள்ள முதல் இந்திய மொழி தமிழாகும்.

### பேச்சுத் தமிழ் - உரை நடைத் தமிழ் வேறுபாடுகள்

தமிழ், அதன் பல்வேறுபட்ட வட்டார வழக்குகளுக்கு மேலதிகமாக, இலக்கியங்களில் பயன்படும் முறையான செந்தமிழ் மற்றும் கொடுந்தமிழ் என இரு வகைப்படுகின்றது. இங்கு கொடுந்தமிழ் என்பது அனைத்து வட்டாரப் பேச்சுத் தமிழ் வழக்குகளையும் பொதுவாகக் குறிக்கும் ஒரு சொற்பயன்பாடு ஆகும்.

தமிழ்மொழி சீர் தரப்படுத்தப்பட்ட செந்தமிழில் இருந்தோ அல்லது பொதுத்தமிழ் வழக்கில் இருந்தோ சற்று வேறுபட்டு பேசப்படும் பொழுதோ அல்லது எழுதப்படும் பொழுதோ கொடுந்தமிழ் என அழைக்கப்படும். கொடுந்தமிழ் எனும் பெயர், ஒரு மரபுச் சொல் வழக்கேயன்றி மொழியின் உயர்வு தாழ்வினைச் சுட்ட இடப்பட்ட பெயரல்ல.

பழந்தமிழ் இலக்கியங்களில் கொடுந்தமிழ், மொழியை மட்டுமல்லாமல், அது பேசப்பட்ட நிலத்தையும் குறித்து நின்றது. "பொது மொழி வேரூன்றியிருந்த நாட்டை செந்தமிழ் நிலம் என்றும் அதிலிருந்து வேறுபட்டுக் கிளை மொழிகள் (வட்டார மொழிகள்) செழித்திருந்த தமிழ்நாட்டுப் பகுதிகளைக் கொடுந்தமிழ் நிலம் என்றும் பழங்காலத்துப் புலவர் பாகுபாடு செய்தனர் எனக் கொள்ளலாம்.

தற்காலத்தில் எழுதுவதற்கும் மேடைப் பேச்சுக்கும் செந்தமிழே பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாகச் செந்தமிழ், பாடநூல்களுக்குரிய மொழியாகவும் பெருமளவுக்கு இலக்கிய மொழியாகவும் மேடைப் பேச்சுகளுக்கும் விவாதங்களுக்கும் உரிய மொழியாகவும் விளங்கி வருகிறது.

அண்மைக் காலங்களில், மரபுவழியில், செந்தமிழுக்குரிய துறைகளாக இருந்து வந்த பகுதிகளிலும் கொடுந்தமிழ்ப் பயன்பாடு அதிகரித்து வருவதைக் காண முடிகின்றது.

பெரும்பாலான தற்காலத் திரைப் படங்கள், மேடை நாடகம் மற்றும் தொலைக்காட்சி, வானொலி முதலியவற்றில இடம் பெறும் மக்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் பலவற்றிலும் கொடுந்தமிழ் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்துறை...

சந்தோஷ் ஜா பார்வையிட்டிருந்தார்.

இதன்போது யாழ்ப்பாண இந்திய துணை தூதரகத்தின் துணை தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்ட இந்தியத் துணைத் தூதரகத்தின் குழுவினரும் அவருடன் குறித்த விஜயத்தில் பங்கேற்றிருந்தனர். (ம-7,285)

## 10 வயதுச்...

மன்னார் தலைமன்னார் கிராமத்தில் 10 வயதான சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மன்னார் தலைமன்னார் கிராமப் பகுதியில் தோட்டம் ஒன்றை பராமரிப்பதற்காக பணியமர்த்தப்பட்ட நபர் ஒருவராலேயே குறித்த சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த நபர் மற்றும் அவரது மனைவி தலைமன்னார் பகுதியில் வசித்து வந்த நிலையில் கணவன் போதைக்கு அடிமையான நிலையில் மனைவி பிரிந்து சென்றுள்ளார் .

இந்நிலையில் அருகில் இருக்கும் வயோதிபப் பெண் ஒருவர் குறித்த சந்தேகநபருக்கு உணவு வழங்கி வந்த நிலையில் அவர்களுடன் நட்பாக பழகி வந்துள்ளார்.

இந்நிலையில் சந்தேகநபர் நேற்று முன்தினம் மாலை உணவு வழங்கும் வயோதிபப் பெண்ணின் பேர்த்தியான குறித்த சிறுமியை கடைக்கு அழைத்து சென்ற நிலையில் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அருகில் இருந்த சிசிரிவி கமராக்களின் உதவியுடனும் ஊர் மக்களின் உதவியுடனும் மேற்கொண்ட தேடுதலின்போது, சிறுமியின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,285)

*(தொடர்புடைய செய்தி உள்ளே)*

## இளம் குடும்...

மூன்று பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய செபமாலை மொரிசன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீட்டில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக குறித்த நபர் கிணற்றுக்குள் குதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## யாழ்.மாவட்ட...

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது 2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இவ்வருடத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டபோது, குறித்த திட்டங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்படவில்லை எனக் கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியதோடு குறித்த விடயம் தொடர்பில் பதில் வழங்குமாறு கேள்வி எழுப்பினர்.

இதனால் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. (ம-7)

## 3 நாட்கள்...

விக்கப்பட்டுள்ளது

அதன்படி எதிர்வரும் 20, 21 மற்றும் 22ஆம் திகதிகளில் கூடுவது என நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பெப்ரவரி 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்காக இரங்கல் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொருளாதார...

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த காலத்தில் நாட்டின் அந்நியச் செலாவணியில் பாரிய மோசடி இடம்பெற்றது. அதனால் வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கு மத்திய வங்கியின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லாமல் போயிருந்தது.

அரச வங்கிகள் சாதாரண மக்கள் தொடர்பில் கண்டுகொள்வதில்லை. அதனால்தான் அந்த மக்கள் கறுப்பு வியாபாரிகளை நாடி, தங்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு பாரிய வட்டித் தொகைக்கு கடன் பெறுகின்றனர்.

இதனால் சாதாரண வியாபாரிகள் விவசாயிகளின் தொழிலில் நட்டம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்கள் அந்தத் தொழிலை விட்டு விடும் நிலைக்குச் செல்கின்றனர்.

அதனால்தான் இன்று நாட்டில் விவசாயம் செய்பவர்களின் வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதனால்இன்னும் தாமதிக்காமல் மத்திய வங்கி இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் நாடு வீழ்ச்சியடைய பிரதான காரணம் மத்திய வங்கியாகும்.

இதற்கு 90 வீதம் மத்திய வங்கியின் நடவடிக்கையே காரணமாகும்” என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்...

இலங்கை தொடர்ந்தும் தவறான நிர் வாகம் மற்றும் பொறுப்புக்கூறல் குறைபாடு காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியி னால் சிரமத்திற்குள்ளாகி வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக நீதி மற்றும் உரிமைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கு பதிலாக, கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதிலும், மனித உரிமைகள் மீதான சர்வதேச கவனத்தை மட்டுப்படுத்துவதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் இலங்கை வேகமாக பின்னோக்கிச் செல்வதாக, குறித்த அறிக்கையில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதி ஆசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதியில் நாடு ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தயாராகும்போது, ரணில் விக்கிரமசிங்க புதிய அடக்குமுறைச் சட்டங்களுடன் எதிர்ப்புகளை ஒடுக்க வலுவான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 0218
S 4 7 4 1 5 4 S
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.02.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1422
S 29 55 64 73 S
Double Chance 23113

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3634
சீட்டிழுப்பு திகதி 16.02.2024
W 27 33 66 67
W 48476
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 0701
கன்னி 10 26 38 56 கன்னி
54300 28

மஹஜன சம்பத
திகதி 2024/02/16
சீட்டிழுப்பு இலக்கம் 5392
T 4 6 2 5 5 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1740
N 12 16 21 58 62
02808

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 16.02.2024 வெற்றி வாரம் 100
U 3 2 4 4 8 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,181,000.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2366 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.16 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 16 58 65 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,998,399.20
DLB

சனிதா
திகதி 2024.02.16 வெற்றி வாரம் 4527 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 13 48 57 68 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 442
சீட்டிழுப்பு திகதி 2024.02.16
வெற்றி இலக்கங்கள் 03 43 47
பச்சை 08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,077,320/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4078 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.16 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 44 60 62 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,876,354.40
DLB

ஜய சேக்ர
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 28 18 20 33 40
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1542
வர்ணம் வெளிர் மஞ்சள்
திகதி 16.02.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 506,488,558.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெள்ளிக்கிழமை
ADA KOTIPATHI
வெற்றி வாரம் : 2192
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2024.02.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.91,741,480/-
வெற்றி இலக்கங்கள் 06 11 63 70 S
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசா ஆலோசனை மற்றும் Show Money

கனடா நாட்டிற்கான விசா ஆலோசனை மற்றும் சகல நாடுகளுக்குமான Show money வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**074 173 7684**

(19145)



## யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 55 மில்லியன் (5 கோடியே 50 லட்சம்)
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

(18948)



## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா. தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம் மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்கு மதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும்(Hoist) இப்பொழுது எம்மிடம்.
(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்)
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க் . என் . கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020



Hotline : 071 535 7799/ 071 973 9917

(19137)



## வேலையாள் தேவை

கனடா & UK Visa செய்யும் அலுவலகத்திற்கு கணனி அறிவுடைய வரும், ஆங்கில அறிவு உள்ள A/L படித்த வேலையாள் (பெண்) தேவை.

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.
021 222 5686
071 415 0995, 021 435 5113

(19141)



## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 986 5457**

(19133)



## PREGNANCY VOUCHER

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம்- பதிவுள்ளோர் மட்டும்)

Happy Super market - உரும்பிராய்
077 780 8030

(19143)



## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas- All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8369)



## குழு நிலை வகுப்புக்கள்

- தமிழ் மொழியும் இலக்கியமும்(தரம் 6 - 11)
- தமிழ் இலக்கிய நயம்(10,11)
- இலக்கண இலக்கிய வகுப்புக்கள்
- வினாத்தாள் வகுப்புக்கள்
- அலகுப் பரீட்சைகள்
- தவணைப் பரீட்சைகள் நடைபெறும்

ஆசிரியர் S.ரகுபதி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(19142)

தொலைபேசி எண் : 077 938 9478



## Canada & UK Visa

சகல ஆவணங்களும் சட்ட வல்லுனர் ஆலோசனையுடன் செய்து கொடுக்கப்படும்.
முறையான ஆவணங்கள் இல்லாதவர்களுக்கும் நாம் பெற்றுக்கொடுப்போம்.
விசா கிடைத்தவுடன் பணம் பெறப்படும்.

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

021 222 5686
071 415 0995
021 435 5113

(19141)



## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
077 544 8503

(19128)



## VACANCY

சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.
- Chief Cashier ஆண்/ பெண்
- Supervisor ஆண்/பெண்

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
இடம் : உரும்பிராய்

076 422 1761

(19143)



## சுத்திகரிப்புப் பணியாளர் தேவை

மேக்ஸ் சுத்திகரிப்புச் சேவை தனியார் நிறுவனத்தால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு ஆண்/பெண் சுத்திகரிப்புப் பணியாளர் கோரப்படுகின்றனர். ஆர்வம் உடையோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(19138)

076 869 5674/ 077 106 5645/ 021 222 2461



## Muthukumaru Maths Academy

இல.19, நாயன்மார் வீதி, நல்லூர்.
தரம் 6 - 11 கணிதம்
ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்
Mathematics English Medium Classes
புதிய வகுப்புகள்
ஆரம்பம் - 19.02.2024
mathematics is queen of science
077 864 5971



## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 267 /= | Max 5Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 297 /= | |
| 1 Kg அரிசி மா | - | 196 /= | |
| 1 Kg கோதுமை மா | - | 184 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 187 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை | - | 168 /= | |
| 1 Kg றவை | - | 284 /= | |
| 400 g Sustagen சஸ்ரயன் | - | 3600 /= | ~~3900/=~~ |
| 1.2 Kg Sunlight பவுடர் | - | 399 /= | ~~450/=~~ |
| 01 Baby Soap | - | 112 /= | ~~145/=~~ |
| 01 Lux Soap Rose | - | 145 /= | ~~175/=~~ |
| 300 g நெஸ்டமோல்ட் | - | 580 /= | ~~620/=~~ |

1040/=




~~1080/=~~
Max - 02

(19143)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org